| MSSRF | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் : | தேனி | காலம் : | 20/07/2024 | முதல் | 24/07/2024 |
| | அறிக்கை எண் : | 058/ 2024 | வெளியீட்டு நாள் : | 19/07/2024 | | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-28° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (14.07.2024 முதல் 18.07.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 24-07-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14/07 | 15/07 | 16/07 | 17/07 | 18/07 | தேதி | நாள்-1 20/07 | நாள்-2 21/07 | நாள்-3 22/07 | நாள்-4 23/07 | நாள்-5 24/07 |
| 5.0 | 6.3 | 17.6 | 6.0 | 8.0 | மழை (மி.மீ) | 50 | 15 | 8 | 4 | 5 |
| 36 | 37 | 36 | 35 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 34 | 34 | 34 | 35 | 35 |
| 26 | 26 | 25 | 27 | 28 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 27 | 27 | 27 | 28 | 28 |
| 6 | 7 | 7 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 6 | 6 | 6 |
| 70 | 84 | 63 | 75 | 60 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 65 | 65 | 58 | 58 | 58 |
| 53 | 83 | 55 | 55 | 56 | | 54 | 54 | 55 | 55 | 55 |
| 16 | 6 | 12 | 10 | 14 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 25 | 22 | 20 | 15 | 12 |
| மேற்கு | வட மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 20 தேதி சற்றே கன மழையும் மற்றும் 21, 22, 23, 24 தேதி லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 34°-35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 27°-28° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 12 முதல் 25 கி.மீ வேகத்தில், மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

### அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு(19ஜூலை-01 ஆகஸ்ட் 2024):

### மழைப்பொழிவு :

19-07-2024 - 25-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

26-07-2024 - 01-08-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

### அதிகபட்ச வெப்பநிலை :

முதல் இயல்பை விட சற்று குறைந்து காணப்படும். 26° செல்சியஸ் முதல் 30° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

26-07-2024 - 01-8-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 26° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

19-07-2024 - 25-07-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 18° செல்சியஸ் முதல் 22° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

26-07-2024 - 01-08-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 22° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**விவசாயம் :**

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 12 முதல் 25 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

விவசாயிகள் தோட்டக்கலை பயிர்களான மிளகாய், கத்தரி, புடலங்காய், வாழை மற்றும் பல வருட பயிர்களை தேர்வு செய்து ஆடிப்பட்டம் விதைப்பு மற்றும் நடவு வேலைகளுக்கு தயார் ஆகும்படி கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 20 தேதி கன மழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர்நிலைகளை சரி செய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும். இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சிமருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கும்படியும், விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும், கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : தக்காளி, வெண்டை, கால்நடை.**

**தக்காளி:**

தக்காளி பயிரில் இலைப்பேன் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இலைகளின் மேற்பரப்பில் வெண்ணிறத் திட்டுகள் காணப்படும், மலர்கள் முதிர்ச்சி அடைவதற்கு முன்பாக விழுந்துவிடும், குருத்து காய்ந்துவிடும்,

மேலும் இலைப்பேன்கள் புள்ளி வாடல் வைரஸ் நோயை பரப்புகிறது.
இவற்றை கட்டுப்படுத்த, தாக்கப்பட்ட செடிகளை வேருடன் பிடுங்கி அழிக்கவும்,

ஒரு ஹெக்டேருக்கு 15 என்ற எண்ணிக்கையில் மஞ்சள் ஒட்டு பொறியை அமைக்கவும்.

தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**வெண்டை:**

வெண்டை பயிரில் இலைசுருட்டுப் புழுவின் தாக்குதல் பரவலாக தென்பட வாய்ப்பு உள்ளது. இவ்வகை புழுக்கள் இலைகளை உமிழ் நீரினாலான நுலினால் சுருட்டி அதற்குள் இருந்து கொண்டு பச்சையத்தை சுரண்டித் உண்ணும், செடியில் உள்ள இலைகள் அனைத்தும் உதிர்ந்தது போல் காணப்படும்.

சுருண்டு இருக்கும் இலைகளை சேகரித்து அழிக்க வேண்டும்.

மேலும் 10 லிட்டர் தண்ணீருக்கு 10 மில்லி ஒட்டுப்பசையுடன் 60 மில்லி வேப்ப எண்ணெய் கலந்து தெளிக்கலாம். அல்லது 10 லிட்டர் தண்ணீருக்கு 50 கிராம் அசாடிராக்டின் 0.03 சத மருந்து அல்லது 10 கிராம் என்ற அளவில் இமாமெக்டின் பென்சோயேட் 5 சதவீத மருந்தை இவற்றில் ஏதேனும் ஒன்றை கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**கால்நடை:**

நிலவும் பருவச் சூழ்நிலையால் தங்களது வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளை வெளிப்புற ஒட்டுண்ணிகள் தாக்க வாய்ப்புள்ளது.

இத்தகைய வெளிப்புற ஒட்டுண்ணிகளை நீக்க, 2 மில்லி பூட்டாக்ஸ் மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தங்களது வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளின் வெளிப்புறங்களில் பூச வேண்டும்.

இந்த மருந்து வெளிப்புற பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். கண்டிப்பாக உள்ளே கொடுக்க கூடாது.